பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., [illegible]

மலர்: 19] சென்னை: புரட்டாசி 25 (11—10—71) திங்கள் வெளியூர்: புரட்டாசி 26 (12—10—71) செவ்வாய் [இதழ்: 98

பொள்ளாச்சி இடைத் தேர்தல்

நவ. 13-ல் வாக்குப் பதிவு

சென்னை, அக். 11—

பொள்ளாச்சி மக்களவை தொகுதிக்கான இடைத் தேர்தல், நவ. 13-ம் நாள் நடைபெறும்.

இதற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய அக்டோ

(4-ம் பக்கம் பார்க்க)

சட்டத்தை உடைப்பதால் கிட்டும்பலன் என்ன?

சமுதாயத்தில் புரையோடிய பகுதியைச் சீர்படுத்த வேண்டாமா?

கடுந்தண்டனையால் மட்டும் குற்றங்களைத் தடுத்துவிட முடியாது — குற்றத் தடுப்பு வார விழாவில் முதலமைச்சர் கருணாநிதி ஆய்வுரை

சென்னை, அக். 11—

"குற்றம் செய்கின்றவர்கள் யார் என்று சிந்தக்காமல், 'எப்படிப்பட்ட குற்றங்கள் செய்தார்கள்' என்பதை ஆராய்ந்து நீதிமன்றத்தில் தண்டனை தருகிறார்கள்; தண்டனை தந்துவிடுவதாலேயே குற்றங்கள் குறையுமா என்றால், குறையாது.

"தண்டனை என்பது, குற்றங்களைத் தடுப்பதாக இருக்கலாம்; ஆனால், மறுபடியும் செய்யப்படும் குற்றங்களைத் தடுக்க முடிகிறதா என்றால், இல்லை.

"கழுமரத்தில் ஏற்றியும் -- சிலுவையில் அறைந்தும் -- தெருவில் இழுத்துச் சென்றும் -- முச்சந்தியில் நிறுத்திக் கொஞ்சம் கொஞ்சமாக உயிரைப் போக்குவதும் போன்ற தண்டனைகள் தரப்பட்ட காலத்திலிருந்துதான் குற்றங்கள் வளர்ந்திருக்கின்றன!

"சமுதாயத்தில் எங்கெங்கே புரையோடும் பாகங்கள் இருக்கின்றன என்று ஆராய்ந்து அறிந்திடவேண்டும்; அவற்றைக் களைவதில் அரசு பொறுப்பேற்க வேண்டும்.

"வன்முறை மலிகிறது என்றால், ஈடுபடுவோர்மீது குற்றஞ் சாட்டுவது மட்டுமன்றி, அவர்கள் எதைச் சொல்லி வளர முடிகிறதோ -- 'நாங்கள் செய்வது சரிதான்' என்று எதைச் சொல்லி அவர்கள் நியாயத்தைக் கற்பிக்க முடிகிறதோ -- அந்தக் காரணத்தை வேரோடு களையவேண்டும்!

"அடிப்படை இருப்பதாலேயே வன்முறை வளர்கிறது; இப்படிச் சொல்வதாலேயே, 'வன்முறையாளர்களுக்கு அனுமதி தரப்பட்டுவிட்டது' என்று கருதிவிடக்கூடாது; குற்றத் தடுப்பு வார விழாவில், வன்முறையாளர்களைக் கட்டவிழ்த்துவிட்டதாகக் கருதிவிடக் கூடாது.

"வன்முறையாளர்கள் யார்மீது குற்றத்தைச் சாட்டுகிறார்களோ, அந்தக் குற்றச்சாட்டுக்கு இலக்காகின்றவர்கள், சமுதாய மாற்றம் ஏற்படும்போது தடைக்கற்களாக இருக்கக்கூடாது; அப்படிப்பட்ட காரியத்தில் ஈடுபடும் அரசோடு ஒத்துழைக்கவேண்டும்; குற்றங்களைத் தடுப்பதற்கு மட்டுமல்ல -- குற்றங்களே நிகழாவண்ணம் அரசு செய்யும் காரியங்களுக்கும் மக்கள் ஒத்துழைக்கவேண்டும்.

"சிலர் நீதிமன்றம் சென்று, 'சட்டத்தைச் சுக்கல் சுக்கலாக உடைத்தெறிந்துவிடலாம்' என்று மகிழ்ச்சியடைகிறார்கள்; வாதத் திறமையால் முற்போக்கான சட்டத்தை உடைத்துவிடுவதன் மூலம், வன்முறையாளர்கள்தான் தலைதூக்க முடிகிறது!

"சட்டத்தை எப்படியும் உடைத்தே தீரவேண்டும் -- என்று கங்கணம் கட்டிக்கொண்டு சிலர் இருக்கிறார்கள்!

"கிளர்ச்சிகளை ஏற்படுத்தவே இருக்கின்ற சிலர் பாமர மக்களிடம் வந்து, அவர்களின் மனத்தில் அந்த எண்ணத்தைப் பரப்பி, கிளர்ச்சியையும் -- வன்முறையையும ஏற்படுத்திவிடுகிறார்கள்; அப்படிப்பட்ட அபாயச் சூழ்நிலை எங்கும் பரவியிருக்கிறது"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், குற்றத் தடுப்புத் தேசிய வார விழாவை -- தமிழ்நாடு உயர் நீதிமன்ற நீதிபதி திரு. வீராசாமி அவர்கள் தலைமையில் தொடங்கிவைத்துப் பேசுகையில் பல மேற்கோள்களுடன் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டி விளக்கினார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:—

"குற்றத்தை ஏன் செய்தான் -- என்று வாதிக்கும்போது, சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கின்ற சில சூழ்நிலைகள், அவர்களை குற்றவாளிகளாக ஆக்கிவிடுகிறது.

இப்படிச் சொல்லி -- சூழ்நிலைகளையே சாதகமாக்கிக்கொண்டு -- குற்றவாளிகள், தாம் செய்ததை தவறல்ல என்று வாதிப்பதும் சரியல்ல!

நீதிபதி அவர்கள் அழகாகச் சொன்னார்கள் -- பளபளப்பான எதிர்காலத்தின் கவர்ச்சியினால், மேலான வாழ்க்கை -- மெருகு குலையாத வாழ்க்கை வாழவேண்டும் என்று பல பெண்கள் விரும்பி, பின்னர், உருக்குலைந்து -- கெட்டு -- வீடு திரும்பமுடியாமல் போனதைப் பற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்.

கவர்ச்சியே சில பேரைக் கெடுக்கின்றன; கவர்ச்சிகர சூழ்நிலை அழைக்கும்போது, இடைத் தரகர்களான குற்றவாளிகள், இன்னொரு குற்றவாளியை உருவாக்கி விடுகிறார்கள்!

திருட்டு -- கொள்ளை -- கள்ள நோட்டடிப்பது -- அடிதடிச் சண்டையில் ஈடுபடுவது போன்ற குற்றங்களைச் செய்கின்றவர்கள், தாம் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக, கண்டுபிடிக்கின்ற அதிகாரிகளுக்கு இலஞ்சம் கொடுத்து -- அதிகாரியையும் குற்றவாளியாக உருவாக்கி விடுகிறார்கள்!

இப்படி நாட்டில் குற்றவாளிகள் பெருகிக்கொண்டே போகிறார்கள்; இதையெல்லாம் ஒவ்வொரு கட்டத்திலும் தடுத்தே தீர வேண்டியிருக்கிறது."

விடுதலைப் படையினர் வீராவேசம்

பாகிஸ்தான் இராணுவம் திடும்பாடு

முஜிபூர் நகர், அக். 11—

வங்க தேசத்தின் பல பகுதிகளிலும், பாகிஸ்தான் இராணுவத்தினருக்கும் -- கொரில்லா விடுதலைப் படையினருக்குள் கடுமையான மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

உயர்தர அதிகாரி ஒருவர் உட்படப் பல போர் வீரர்களை, விடுதலைப் படையினர் கொன்றிருக்கின்றனர்.

இரயில்களைக் கவிழ்த்தும், செய்திப் போக்குவரத்துக்களைத் துண்டித்தும் பாகிஸ்தான் இராணுவத்தினருக்குப் பெருந் தொல்லைகளை விடுதலைப் படையினர் ஏற்படுத்திவருகின்றனர்.

படித்தவர்கட்கு வேலை வாய்ப்பு

மத்தியப் பிரதேச அரசின் திட்டம்

போபால், அக். 11—

படித்தமக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கான திட்டம் ஒன்றை மத்தியப் பிரதேச அரசு பரிசீலித்து வருகிறது.

அண்மையில் இத்திட்டம் குறித்து முதலமைச்சர் சுக்லா அறிவித்திருந்தார்; ஆனால் இவர்கள், உடலுழைப்பில்லா வேலைகளை மட்டும் எதிர்பார்க்கக் கூடாதென்றும், சாலை போடுதல்—கட்டடம் கட்டுதல் போன்ற வேலைகளையும் செய்ய முன்வர வேண்டுமென்றும் முதலமைச்சர் கேட்டுக்கொண்டிருந்தார்.

இப்படிப்பட்ட உடலுழைப்பு வேலைகளைச் செய்பவர்களுக்கு மற்றவர்களைவிட நாளொன்றுக்கு ஒரு ரூபாய் அதிகம் கூலி தரப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

தடை நீக்கம் அவாமி லீக்குக்கு இல்லையாம்!

யாகியா கானின் ஓரவஞ்சக நடவடிக்கை

இராவல்பிண்டி, அக். 11—

முஜிபுர் ரகிமானின் அவாமி லீக் கட்சிக்கு விதிக்கப்பட்டிருந்த தடை இன்னும் தொடர்ந்து இருந்துவருகிறது.

6 மாதத்துக்குமுன், அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்த யாகியா கான் உத்தரவிட்டிருந்தார்; இப்போது அந்தத் தடை நீக்கப்பட்டிருக்கிறது.

ஆயினும், புதிய சில கட்டுப்பாடுகளை யாகியா கான் அறிவித்தார்; அவாமி லீக் மீதிருந்த தடையும் நீக்கப்படவில்லை.

ஆங்கிலத்தில் பேசினார் இந்தி வெறியர்

மக்களின் எதிர்ப்புக்குப் பணிவு

சென்னை, அக். 11—

நேற்று இங்கு பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிய ஜனசங்கத் தலைவர், தம் உரையை இந்தி மொழியில் ஆற்றினார்; அதற்குத் தமிழ் மொழிபெயர்ப்பு தரப்பட்டது.

ஆனால், கூட்டத்தினர், 'இந்தியில் பேசாதீர்கள்; தமிழ் மொழிபெயர்ப்புக்கூட இன்றி ஆங்கிலத்திலேயே பேசுங்கள் போதும்' என்றனர்.

எனவே, கூட்டத்தினர் கோரிக்கைக்குப் பணிந்த வாஜ்பாய், ஆங்கிலத்தில் பேசுகிறேன்; அதற்குத் தமிழ் மொழிபெயர்ப்பையும் வைத்துக்கொள்கிறேன்; என்றார்.

ஆங்கிலத்தில் பேசத் துவங்கிய பின், 'ஆங்கிலத்தால் ஒரு போதும் எந்த இந்திய மொழியின் இடத்தையும் பெறமுடியாது; ஆங்கிலம் சாமானியனின் மொழியன்று; இந்த நாட்டு மக்களிடத்தில் ஆங்கிலத்தின்மீது அக்கறையிருப்பது எனக்கு வியப்பாக இருக்கிறது; தனக்கு ஆங்கிலம் தெரியும் என்று சென்னையில் எத்தனைப் பேர் சொல்ல முடியும்' என்று கேட்டார்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தி.மு.க. ஆட்சிமன்றக் குழுக் கூட்டம்

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிமன்றக் குழுக் கூட்டம், 17-10-71 ஞாயிறு காலை 9-மணிக்கு சென்னை-அண்ணா சாலையில் உள்ள தி. மு. கழகச் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில், கழகத் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெறும்.

பொருள்:—

பொள்ளாச்சி நாடாளுமன்ற இடைத் தேர்தல்

'அறிவகம்'
சென்னை-18
10-10-'71

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. க.

'பூர்ஷ்வாக்களின் பொருளாதாரத்தைப் பற்றிய சிந்தனை எங்களுக்குக் கிடையாது'

'அந்தப் படிக்கட்டுகளில் ஏறுவதற்கு நாங்கள் அருகதை அற்றவர்கள்'

'ஏழைகளின் இனிய சிரிப்பே கழக அரசின் பொருளாதாரம்'— அதனை உருவாக்கிடவே ஆர்த்தெழுந்து செயல்படுகின்றோம்'

ஜனசங்கத் தலைவரின் விதண்டாவாதக் கூற்று — முதல்வர் கருணாநிதி இடித்துரை

சென்னை, அக். 11—

"திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குப் பொருளாதாரக் கொள்கை இல்லை — என்று ஒரு தீவிரக் கம்யூனிஸ்டு சொல்லியிருந்தால், அதைப் பற்றி விவாதத்துக்கு எடுத்திருக்கலாம்; ஒரு மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்டு அப்படிக் கேட்டிருந்தால், அதைப் பற்றி விவாதிக்கலாம்; ஒரு சோஷலிஸ்டுக் கேட்டிருந்தால், விவாதத்துக்குரிய ஒன்ருக எடுத்துக்கொண்டிருக்கலாம்; ஆனால் இப்படிக் கேட்டிருப்பவர் யார் என்று நமக்குப் புரிகிறது!

"பொருளாதாரம் முழுவதையுமே தங்கள் வாழ்வுக்கு ஆதாரம் என்று பேசிக்கொண்டிருக்கும் ஒருவர் இப்படிக் கேட்டிருப்பது எப்படியிருக்கிறதென்ருல், குருதிச் சொட்டிய நாக்குடன் வேங்கை வேதாந்தம் பேசியதைப்போல் இருக்கிறது!

"நாம் கோடிக்கணக்கான ரூபாய் கொண்ட பொருளாதாரத்தைப் பற்றிச் சிந்திக்கின்றவர்கள் அல்லர் — வெகு சாதாரணமானவர்கள்! சாமானிய மக்களைப் பற்றி — சாமானியர்களின் பொருளாதாரத்தைப் பற்றித்தான் நாம் இப்போது சிந்தித்துக் கொண்டிருக்கிறோம்!

"முன்பெல்லாம் ஒரு காலம் இருந்தது; 'நான் பெரிய அந்தஸ்துடையவன்' என்று சொல்லிக்கொள்வதில் பெருமை அடைந்த காலம் அது!

"இன்று நாங்கள், 'சாமானியர்கள்' என்று சொல்லிக் கொள்வதுதான் பெருமை; இந்தச் சாமானியர்களின் நலனை மேம்படுத்தும் பொருளாதாரத் திட்டத்தைத்தான் அண்ணா அவர்கள் சிந்தித்தார்கள்! நாமும் இதையேதான் சிந்திக்கிறோம்!

"மந்தமாருதம் வீசும் நந்தவனத்தில் சந்தனம் தடவி — பன்னீரில் குளித்து — பழரசம் பருகி — பாவையர்கள் அருகில் இருக்கும் அந்தப் பூர்ஷ்வாக்களின் பொருளாதாரத்தைப் பற்றிய சிந்தனை நமக்குக் கிடையாது!

"அந்தப் படிக்கட்டுகளில் ஏறுவதற்கு நாங்கள் அருகதையற்றவர்கள் என்று சொல்லிக்கொள்வதில்தான் எங்களுக்குப் பெருமை!

"'எங்களுடைய பொருளாதாரம், ஏழையர்கள் மகிழ்ச்சி காணும் இனிய சிரிப்பில்தான் இருக்கிறது; அந்தச் சிரிப்பில்தான் இறைவனைக் காண்கிறோம்' என்று அண்ணா அவர்கள் ஏடுகள்தோறும் எழுதிக் காட்டினார்கள் — மேடைகள்தோறும் பேசினார்கள்; அவர் கண்ட கனவுகளை — இலட்சியங்களை நிறைவேற்றுவதற்குத்தான் நானும் நாவலர் போன்றவர்களும் ஆர்த்தெழுந்து செயல்பட்டு வருகிறோம்"

இவ்வாறு முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், ஜனசங்கத் தலைவர் வாஜ்பேயி அவர்களின் கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் கருத்தறிவித்தார்.

சென்னை— திருவல்லிக்கேணி லாக் நகர் பகுதியில் நடைபெற்ற குடிசை மாற்றுப் பணிக்கான கால்கோள் விழாவில் உரையாற்றுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

இன்று உடலளவில் அவர் மறைந்துவிட்டிருந்தாலும், இந்த நாட்டை ஆளும் பொறுப்பை ஏற்றுள்ள நாம் அவர் வகுத்துக் காட்டிய வழியிலேயே நடந்து வருகிறோம்.

ஏழைகளும் சாமானியர்களும் ஏற்றம் பெறுவதற்கு அண்ணா அவர்கள் வழியிலேயே நடந்து — திட்டங்கள் வகுத்துச் செயலாற்றி வருகிறோம்.

ஏழைகளின் மகிழ்ச்சியில்தான் நிறைவு பெறுகிறோம்

ஏழையின் சிரிப்பில் நாங்கள் இறைவனைக் காண்கிறோம்' என்று சொன்னதை, இப்போது சிலர் கேலி செய்கிறார்கள்; ஏழை எங்கே சிரிக்கப் போகிருன் — அவனுக்குக் கிசுகிசுப்பு மூட்டினால்தான் சிரிப்பான்' என்றெல்லாம் சொல்கிறார்கள்.

நாங்கள் நினைப்பது — பார்ப்பது எல்லாம் — ஏழையர் சிரிப்பில் காண விழைவது எல்லாம் — இங்கே தொழில்கள் வளர்ந்தாலும் வேறு பல சாதனைகள் பெருகினாலும், விவசாயம் உயர்ந்தாலும் இவையெல்லாம் ஏழைகளுக்குப் பயன் தருகிறதா என்பதைத்தான்!

இங்கு பெருகும் நன்மைகளால் பலன் பெறப் போகின்றவர்கள் யார் என்பதைத்தான்!

அப்படிப் பலன் பெறுகின்றவர்கள் சாதாரண மக்களா என்பதைத்தான் நாங்கள் பார்க்கிறோம் — அவர்களின் மகிழ்ச்சியில்தான் நாங்கள் நிறைவு கொள்கிறோம்!

துன்பச் சேற்றிலிருந்து மீண்டே ஆகவேண்டும்

இந்த அரசு, 'சாதாரண மக்களுக்கு நன்மை ஏற்பட வேண்டும்' என்றுதான் பார்க்கிறதே தவிர 'ஏழை எளியவர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று பேதம் பிரித்துப் பார்ப்பதில்லை.

நாங்கள், ஏழைகளை ஒரு வர்க்கமாகக் காண்கிறோம்; அந்த வர்க்கத்துக்குத் துன்பத்தில் மட்டும்தான் பங்கு — சுகத்தில் வேறு யாருக்கோ பங்கு — என்று நாங்கள் தள்ளிவைத்துவிட முடியாது. இந்த வர்க்கம் துன்பச் சேற்றிலிருந்து விலகி இன்பத்தைப் பெற்றே ஆகவேண்டும்.

இதற்காகத்தான், ஏழு ஆண்டுகளில் ரூ. 40 கோடி செலவில் இந்தச் சென்னை நகரில் குடிசைகள் மாற்றப்பட வேண்டும் என்று அரசு தீவிரமாக முன் வந்திருக்கிறது.

அடுத்த கால்கோள் விழா

இந்தத் திட்டம் தமிழகம் முழுவதிலும் பரவி ஆகவேண்டும்; மத்திய அரசின் உதவி கிடைக்கவில்லையென்றாலும் இந்தப் பணியை ஒத்திவைக்க முடியாது!

ஒத்திவைக்க முடியாத திட்டம் இது; அதனாலேயே, 'இந்தப் பணியில் துரிதம் காட்டுங்கள்' என்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

கால்கோள் இடப்படும் ஒவ்வொரு விழாவிலும், அடுத்த விழாவுக்கு என்னிடம் தேதி வாங்கிக்கொண்டு — வாரியத் தலைவர் அரங்கண்ணல் இப்போது துரிதம் காட்டி வருகிருர்; அடுத்த கால்கோள் விழா வடசென்னையில் நடக்க இருக்கிறது; இதைவிட மகிழ்ச்சி தரக்கூடிய காரியம் வேறொன்றுமில்லை.

குடிசைகளை மாற்றிக் காட்டினால், சிலருக்கு 'இது சாதாரணம்தானே' என்றுகூடத் தோன்றலாம்!

பணியின் அருமை புரியாதவர்கள் கூற்று

தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட போது மக்கள் புகலிடம் இல்லாமல் தவித்தபோது, மாநகராட்சி சார்பில் பள்ளிகளிலும் — பொது இடங்களிலும் மக்களைத் தங்கச் செய்து — அவர்களுக்கு மதிய உணவு வழங்கும் ஏற்பாடுகளைச் செய்து பாதுகாக்கப்பட்ட நிகழ்ச்சிகளையெல்லாம் எண்ணிப் பார்த்தால், இந்தக் குடிசை மாற்று ஏற்பாடு எவ்வளவு பெரிய பணி என்பது புரியும்.

இந்தப் பணியை, 'சாதாரணமானது' என்று அவர்கள் நினைத்தால், அதற்குக் காரணம், இந்தப் பணியைச் செய்துவரும் நாம் சாதாரணமானவர்கள் என்பதேயாகும்.

குப்பைக் கூளம் கொட்டி வைக்கப்பட்டது போன்ற குடிசைகளை மாற்றி, சேட்டுக் கடையில் மைசூர் பாகு அடுக்கி வைத்தாற் போன்ற இந்த அடுக்கு மாடிக் கட்டடங்களை அமைக்கின்ற சாதாரணமானவர்களான நாம், அவர்களுக்குச் சாதாரணமானவர்களாகத் தோன்றலாம்.

அவர்கள் புகழ்கிருர்கள் — இவர்களுக்குப் பொருமை முந்திவிடுகிறது

ஆனால், நம்முடைய திட்டத்தைப் பாராட்டி வேறு மாநிலத்தவர்கள் புகழ்கிருர்கள்; அண்மையில் இங்கு வந்து பார்வையிட்ட மத்திய அமைச்சர் குஜ்ரால், இத்திட்டம் பற்றிப் பெங்களூரில் புகழ்ந்துரைத்திருக்கிருர்.

இங்கு நடைபெறும் குடிசை மாற்று வாரியத்தின் பணியைப் பார்வையிட்டுச் சென்ற பெங்களூர், வாரியத் தலைவரும் இதைப் பற்றிப் பாராட்டிப் பேசியிருக்கிருர்.

ஆனால் இங்குள்ளவர்களுக்கு— இதை நாமே, செய்வதால்— வெகு அருகாமையில் நடப்பதால் — இதன் அருமை புரியவில்லை; மிகச் சாதாரணமானது' என்கிருர்கள்!

இங்குள்ளவர்களுக்கு, புகழ்வதற்கு முன்னால் பொருமை வந்து முந்திவிடுகிறது!

'மற்றவர்கள் நம்மைப் பாராட்ட வேண்டும் — வெளி மாநிலத்திலிருந்து பாராட்டுரைகள் நமக்கு வரவேண்டும்' என்றெல்லாம் நாம் எதிர்பார்க்கவில்லை.

அண்ணாவின் இலட்சியத்தை நிறைவேற்றி வைக்கிறோம்

பேரறிஞர் அண்ணா அவர்கள் பல ஆண்டுகளாக, இந்தச் சமுதாயத்தில் ஏழைகளின் நிலை உயரவேண்டும்' என்று கனவு கண்டார்; அந்தக் கனவை நாம் நிறைவேற்றி வைக்கிறோம்.

இந்தப் பணியைப் பார்த்து ஒரு ஏழைத் தாய் — ஒரு ஏழைக் கிழவன் — அல்லது ஒரு ஏழைச் சிறுவன், 'எங்களுக்காக இதை நிறைவேற்றியிருக்கிறாயே — நீ வாழ்க' என்று சொன்னாலே போதும் — அது, ஆயிரம் கடவுள்கள் வந்து வாழ்த்துவதற்கு

(4-ம் பக்கம் பார்க்க)

யார் பொருள்?

சென்னை, அக். 9—

சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளரின் அலுவலகத்தில் 31—8—71 வரை கிடைக்கப் பெற்றுள்ள — எவராலும் உரிமை கோரப்படாத ஒரு சங்கிலி, பல சைக்கிள்கள், பெண்கள் பயன்படுத்தும் கைப் பைகள், 'டிஃபனி' கைக்கெடிகாரம், 'டைம் ஸ்டார்' கைக்கடிகாரம் முதலிய பல பொருள்கள் இருக்கின்றன.

"இவைகளின் உரிமையாளர்கள் 6—11—71-க்குள் எழுத்து மூலமாகக் கோராவிடில், அந்தத் தேதிக்குப் பிறகு அப்பொருள்கள் உரிய முறையில் 'பைசல்' செய்யப்படும்" எனச் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையாளர் அறிவிக்கின்ருர்.

பூனாவில் அண்ணா பிறந்த நாள் விழா

பூனா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா, 26—9—71 மாலை 6 மணியளவில் கிர்லோஸ்கர் கம்பெனிக்கு எதிரில் உள்ள துவக்கப் பள்ளியில் நடைபெற்றது; தோழர் ஆர். எஸ். ஏ. குமரேசன் தலைமை தாங்கினார்.

துணைச் செயலாளர் எஸ். கே. முத்தையா அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பம்பாய் தி. மு. க. செயலாளர் எஸ். தியாகராசன் அறிஞர் அண்ணா படத்தைத் திறந்துவைத்துப் பேசினார்.

தோழர் த. மு. பொற்கோ அறிஞர் அண்ணா படிப்பகத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினார்.

பூனா தி. மு. க. செயலாளர் ம. ரா. தமிழ்மணி நன்றி நவின்ருர்.

கழகத் தோழர்கள் பலர், படிப்பகத்திற்கு ஏராளமான தமிழ்— ஆங்கில நூற்களை அன்பளிப்பாகக் கொடுத்தனர்.

அறிவாலயங்களாகக் கல்வி நிலையங்கள்

எதிர்காலத்தை உருவாக்கும் பணியில் ஆசிரியர்கள்

விருது வழங்கு விழாவில் கலைஞர்— நாவலர் உரை

கல்விப் பணியில் சிறந்து விளங்கும் தமிழகத்துக்கு ஆளுநர் கே. கே ஷா பாராட்டு

சென்னை, அக். 9—

துவக்கப் பள்ளி ஆசிரியர்கட்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கட்கும் மாநில அரசு வழங்கும் விருதுகளை நேற்று ஆளுநர் திரு. கே. கே. ஷா வழங்கினார்; 180 ஆசிரிய — ஆசிரியைகள் வந்திருந்து விருதுகளைப் பெற்றனர்.

கல்வித் துறையில் சிறந்த பணியாற்றிவரும் ஆசிரிய — ஆசிரியைகட்கு 1960 ஆண்டு முதல் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

நேற்று விருது பெற்ற 180 பேரில் உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் 90 பேர்; அவர்களில் 35-க்கும் மேற்பட்ட ஆசிரியைகள் உள்ளனர்.

எண்பது கிராம் எடையுள்ள வெள்ளிப் பதக்கமும், ரூ. 200 பணம் — நற்சான்றிதழும் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டன.

துவக்கத்தில், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. சி. வி. சிட்டிபாபு அனைவரையும் வரவேற்ருர்.

முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் விழாவுக்குத் தலைமைவகித்தார்.

விருது பெற்ற ஆசிரிய — ஆசிரியைகளைப் பாராட்டி கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் உரையாற்றினார்.

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கு ஆசிரியர்கள் - மாணவர்கள் — பள்ளி நிர்வாகிகள் சார்பில் ரூ 2,10,597.28-ம், 20 பவுன் நகையும் முதல்வரிடம் அளிக்கப்பட்டது.

ஆளுநர் கே. கே. ஷா

விருதுகளை வழங்கி ஆளுநர் கே. கே. ஷா பேசியதாவது:—

"மாணவர்களின் பிஞ்சு மனத்தில், சனநாயகத்தின் வாழ்க்கை நெறிப் பண்புகளை வேரூன்றச் செய்வதற்கு ஆசிரியர்கள் முயற்சிக்க வேண்டும்.

"'14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரும் இலவசமாகவும் — கட்டாயமாகவும் கல்வி பெறும் வாய்ப்பு எல்லா மாநிலங்களிலும் உண்டாக வேண்டும்' என்பது அரசியல் அமைப்பு விதி முறையின் கட்டளையாகும்; இந்தக் கட்டளையை நிறைவேற்றுவதில் பெரும்பாலான மற்ற மாநிலங்கள் தேக்கமடைந்து நிற்கின்றன; ஆனால் தமிழ்நாடு அரசு இந்த வகையில் போற்றத்தக்க சாதனையைப் புரிந்துள்ளது.

"நடப்பு ஐந்தாண்டுத் திட்டக் கால முடிவுக்குள் 6 வயது முதல் 11 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரும் கல்வி பெறும் வாய்ப்பினை அளித்துத் தமிழ்நாடு அரசு சாதனை புரியும்; 11 வயது முதல் 14 வயது வரை 80 சதவிகிதம் குழந்தைகளும், 14 வயது முதல் 17 வயது வரையுள்ளவர்கள் 55 சதவிகிதமும் கல்வி பெறும் வாய்ப்பினை இந்தக் கால அளவில் தமிழ்நாடு அரசு தனது சாதனையாக நிறைவேற்றும்; இதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது."

கலைஞர் கருணாநிதி

முதல்வர் கலைஞர் அவர்கள், தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:—

"பள்ளிகள், அறிவாலயங்கள் போன்றவைகளாகும்; தற்கால விஞ்ஞானமுறைக்கேற்ற கல்வியறிவையூட்டி — நல்ல மாணவர்களை உருவாக்கித் தர வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுக்கு இருக்கிறது.

"நாட்டுப் பற்று — மொழிப் பற்று — சமுதாயப் பற்று ஆகிய கொள்கைகள் மாணவர்களின் உள்ளத்தில் பதியும் விதத்தில் ஆசிரியர்கள் சொல்லித்தர வேண்டும்.

"கல்விக் கண்களைப் பெற்ருல்தான் உலகப் புத்தகத்தை நன்ருகப் படிக்க முடியும்; இத்துறையில் ஆசிரியர்களின் பணி மகத்தானது; அவர்கள் புத்தகங்களைப் படித்து — அதை மாணவர்களுக்குக் கற்பித்து — அவர்களைப் புத்தகப் புழுக்களாக ஆக்கினால் மட்டும் போதாது; அவர்கள் நல்லபடி சிந்திக்கவும் கற்றுத்தர வேண்டும்.

"பண்டித நேரு அவர்கள் ஒரு விழாவில் பேசுகையில், 'அழுத்தம் திருத்தமாக, 'நாட்டில் சமுதாய மாற்றம் ஏற்பட்டாக வேண்டும்; மாணவர்களுக்குப் புத்தக அறிவோடு பகுத்தறிவுக் கொள்கைகளையும் கற்றுத் தர வேண்டும்; மூட நம்பிக்கைகளை ஒழித்தாக வேண்டும்' என்று வலியுறுத்திக் கூறியிருக்கிருர்; இதை ஆசிரியர்கள் மனத்தில்கொள்ள வேண்டும்.

நாவலர் நெடுஞ்செழியன்

கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"படிப்பு மட்டும் சொல்லிக் கொடுப்பதால் பயனில்லை; அறிவை வளர்த்து — சிந்தனை ஆற்றலைப் பெருக்கித் தக்க அளவிற்குக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்.

"'நாட்டின் எதிர்காலத்தை உருவாக்குபவர், அரசியல் வாதியா — ஆசிரியரா' என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் அறிஞர் அண்ணா அவர்கள், 'தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றியே அரசியல் வாதிக்குத் தெரியாது; அப்படியிருக்க, எதிர்காலத்தை எப்படி அரசியல்வாதி உருவாக்க முடியும்?' என்ருர்.

"ஆசிரியர்கள்தான், நாட்டின் எதிர்காலத்தை வகுப்பு அறைகளில் உருவாக்கி வருகிருர்கள்; பள்ளிப்பருவத்தில்தான் ஒரு மாணவனின் எதிர்கால வாழ்வுக்கான குணங்கள் — பண்புகள் ஆகியவை உருவாக்கப்படுகின்றன; ஆகவே, மாணவர்களைச் சான்ருேர்களாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர்களுடையதாகும்."

இரங்கல்

விராலிமலை கழகத் தோழரும் திருச்சி மாவட்ட தி.மு.க. உறுப்பினருமான திரு. சுப்பையா 1—10—71 அன்று இயற்கையெய்தியது குறித்து திருச்சி மாவட்ட தி.மு.க. சார்பில் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதாக மாவட்டத் துணைச் செயலாளர் எம். எஸ். வெங்கடாசலம் அறிவிக்கிருர்.

புதிய கருவிகளைக் கண்டுபிடிப்பதால் மட்டும் பயனில்லை

அவற்றின் விலையும் மலிவாக இருக்க வேண்டும்

'அறுவடை. இயந்திரம்' இயக்கி விழாவில் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் வலியுறுத்தல்

சென்னை, அக். 9—

நெல் அறுவடை செய்வதற்கான நவீன இயந்திரத்தை, அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் பார்வையிட்டார்.

'விகான்' நிறுவனத்தை தயாரித்திருக்கும் இந்த 'அறுவடை இயந்திர'த்தை இயக்கிக் காட்டும் விழா, செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி வட்டத்தில் வண்டிக்காவனூர் என்னும் கிராமத்தில் உள்ள அசோகா பண்ணையில் நடந்தது.

விழாவில், வேளாண்மை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் கலந்து கொண்டு பேசுகையில் கூறியதாவது:—

"விவசாயத் துறையில் தமிழ்நாடு அரசு எடுத்துக்கொண்ட அக்கறை காரணமாக உணவு உற்பத்தியில் ஓரளவு தன்னிறைவு பெற்றிருக்கிறோம்.

விவசாயிகளுக்குத் தேவைப்படும் உர வகைகளை வேண்டிய அளவுக்குச் சலுகை விலையில் தந்து வருகிறோம்; தரமுள்ள விதைகளைக் கொடுத்து உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்திருக்கிறோம்.

உயர் ரக நெல் வகைகளைக் கண்டுபிடித்திருப்பதைப்போல் மற்றத் தானியங்களிலும் அதிக விளைச்சல் தரும் வகைகளைக் கண்டுபிடித்துவருகிறோம்.

வட ஆற்காடு மாவட்டம் செங்கத்தில் 11,000 ஏக்கர் பரப்பில் அமைக்கப்பட்டிருக்கும் விவசாயப் பண்ணை விவசாய வளர்ச்சிக்கு மேலும் உதவும்; இந்தப் பண்ணையில், 'நமது பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே வேலை தர வேண்டும்' என்று கூறியிருக்கிறோம்; இங்கு ஆயிரம் விவசாயிகளுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வழி ஏற்பட்டிருக்கிறது.

விவசாயத்தில் நவீன முறைகளைக் கடைபிடிப்பதிலும் அதிக அக்கறை கொண்டிருக்கிறோம்; விவசாயத்துக்குப் பயன்படும் கருவிகளைக் கண்டுபிடித்து விவசாய வளர்ச்சிக்கு உதவும் நிறுவனங்களைப் பாராட்டும் இந்த நேரத்தில் அந்தக் கருவிகளை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்த வசதியாகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்யவேண்டும்; அப்போதுதான் நாம் விரும்பும் பலன் கிடைக்கும்; இதை, இயந்திரத் தயாரிப்பு நிறுவனங்கள் மனத்தில் கொண்டு செயல்படவேண்டும்."

ஆண்டவனைத்தொழுத பக்தர்கள் கையாண்ட முறை

சேலத்தில் பெரியாரும் பின்பற்றினாரா?

ஆச்சாரியார் கூறியதன் கருத்தும் அதுதானா?

சென்னை, அக். 11—

"சேலம் நிகழ்ச்சி பற்றி வழக்கு நடந்துகொண்டிருக்கும் போதே ஆச்சாரியார் அவர்கள், பெரியாரைப் பற்றி 'பிரசன்ன ஆத்திகர்' (மறைந்திருக்கும் ஆத்திகர்) என்று கூறுகிருர்.

"பெரியாரை, 'நாத்திகர்' என்று தண்டிப்பதா? 'பிரசன்ன ஆத்திகர்' என்று போற்றுவதா?

"'நிந்தாஸ்துதி' என்பதுகூட, 'கடவுளை வழிபடும் முறைகளில் ஒன்று' எனக் கூறுவார்கள்; சேலத்தில் நடைபெற்றது நிந்தாஸ்துதி' என்று எடுத்துக்கொண்டு, பெரியாரையும 'கடவுள் பக்தர்' என்று கூறுகிருர்கள்.

"சாக்கிய நாயனர் என்பவர், 'கடவுளைக் கல்லாலேயே அடித்துப் பூஜித்தார்' என்று புராணம் கூறும்.

"கண்ணப்ப நாயனர், தாம் தொழுதுவந்த சிவலிங்கத்தின் கண்களிலிருந்து குருதி ஒழுகிய காரணத்தால், 'செருப்பு அணிந்திருந்த காலை சிவபெருமானின் கண்களில் வைத்து தனது கண்களைப் பெயர்த்து வைத்தான்' என்பார்கள்.

"'சாக்கிய நாயனர் கல்லால் அடித்து வணங்கியதுபோல்— கண்ணப்ப நாயனர் செருப்புக் காலால் உதைத்ததுபோல், பெரியாரும் சேலத்தில் செய்தார்; நீ ஏன் தலையிட்டு நடவடிக்கை எடுத்தாய்' என்று 'இப்போது பெரியாரை 'பிரசன்ன ஆத்திகர்' எனக் கூறுபவர்கள்) கேட்டால், நான் என்ன பதில் சொல்ல முடியும்?

"பெரியாரைப் பற்றி இப்படி முன்கூட்டியே கருத்தைச் சொல்ல முடியாத மிகச் சிறியவன் நான்; அவசரப்பட்டு அப்போது என் கருத்தைக் கூறியிருந்தால், இப்போது ஆச்சாரியார் கூறும் கருத்துக்கு எதிர்க் கருத்தாக அது போயிருக்கும் அல்லவா?"

—முதலமைச்சர் கருணாநிதி

('அறைகூவலும் விளைவும்' என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழாவில்)

குன்னூர் நகராட்சி ஒருமைப்பாட்டு நாள் நிகழ்ச்சி

சிண்டிகேட் உறுப்பினர்கள கலந்துகொள்ளவில்லை

குன்னூர் நகராட்சி மன்றத்தில் 4—10—71 காலை 9.15 மணியளவில் மன்றத் தலைவர் திரு. கே. பி. முருகேசன் தலைமையில் தேசிய ஒருமைப்பாட்டு நாள் கொண்டாடப்பட்டது

அதுபோது மன்ற உறுப்பினர்கள் திரு. என். மீனாட்சிசுந்தரம் (தமிழரசுக் கழகம்) திரு எம். தன்ராசி (தி மு.க) திரு நாராயணன் (ஆசிரியர்), திரு. பசுலுல்லா (நகர நல ஆய்வாளர்) ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில், சிண்டிகேட் காங்கிரசு உறுப்பினர்கள் சி. மயில்சாமி, சங்கரநாயர், வி.வி. இராமன் ஆகியோர் கலந்துகொள்ளவில்லை.

தமிழகத்தில் காடு வளர்ப்பு

விரிவான திட்டம் வகுக்கப்படும்

சென்னை, அக். 9—

"காடுகள் வளர்ச்சிக்கான விரிவான திட்டம் வகுக்கப்பட்டு வருகிறது; இது நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்"

என்று வன வளத்துறை அமைச்சர் திரு ஓ. பி. இராமன் அவர்கள் அறிவித்தார்.

கிண்டியில் குழந்தை பூங்காவில வன விலங்குகள் பாதுகாப்பு வார விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில தெரிவித்தார்; 'காடுகளில் ஆக்கிரமிப்பதைத் தடுக்கக் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும்' என்று எச்சரித்தார்.

இலங்கைத் துணைத் தூதுவர் திரு. பெர்னாண்டோ, மலாசியா துணைத் தூதுவர் திரு. குமாரசேரி ஆகியோர், இயற்கையின் அழகைப் பாழடிக்காமல் காட்டு உயிரினம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தினர்.

இனாம் ஒழிப்பு மசோதா — குடியரசுத் தலைவர் ஒப்புதல்

சென்னை, அக். 9—

இனாம் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்து வாரியாக மாற்றுதல்) திருத்த மசோதாவுக்கு குடியரசுத் தலைவர் தமது அங்கீகாரத்தை அளித்தார்.

இம்மசோதா, தமிழக சட்டமன்றத்தில் நிறைவேறியுள்ளது.

சாகுபடி குத்தகைதாரர்களுக்கு ரயத்து வாரி பட்டா மீதான அவர்களது உரிமை, செட்டில்மெண்ட் அதிகாரி அல்லது டிரிபியூனலினால் தீர்மானிக்கப்படும் வரையில் நிலத்திலிருந்து வெளியேற்றப்படாதிருக்க இடைக்காலப் பாதுகாப்புக்கு இம்மசோதா வகை செய்கிறது.

அண்ணா வகுத்துத் தந்த வழியிலேயே செல்கிறோம்

"1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி. மு. கழக அரசு அமைத்த போதே அண்ணா அவர்கள், 'இந்த அரசு தீட்டும் திட்டங்கள் எதுவானாலும் — அந்தத் திட்டங்களால் ஏழைகளும், நடுத்தர மக்களும், சாமானியர்களுமே நன்மை அடைந்திடுவர்' என்று அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டார்கள்.

கூட்டுறவுத் துறையில் சாராயத் தொழிற்சாலை

தமிழக அரசு முடிவு

சென்னை, அக். 9—

நாள் ஒன்றுக்கு ஓர் இலட்சம் லிட்டர் சாராயம் உற்பத்தி செய்யும் ஆலை கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும்; இதற்கான முடிவைத் தமிழக அரசு எடுத்திருக்கிறது.

இது தவிர, தனியார் துறையிலும் ஒரு சாராய உற்பத்தி ஆலை துவங்குவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன.

தமிழ்நாட்டில் தற்போது நெல்லிக்குப்பம், திருச்சி ஆகிய இரு இடங்களில் சாராய உற்பத்தி ஆலைகள் இருக்கின்றன; சாராயக் கடைகள் திறப்புக்குப் பிறகு இந்த இரு ஆலைகளிலும் உற்பத்தியாகும் சாராயம் தமிழகத் தேவைக்குப் போதுமானதாக இல்லை; எனவே மூன்ருவது சாராய உற்பத்தி ஆலை கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும்.

தமிழகத்தில் மருத்துவத் தேவைகளுக்காகவும் — சாராய உற்பத்தி தேவைக்காகவும் ஆறரை இலட்சம் லிட்டர் 'ஆல்கஹால்' பீகாரிலிருந்து பெறப்படும்.

மேலும் தமிழகத் தேவைகளுக்காக உத்தரப்பிரதேசம் போன்ற வட இந்திய மாநிலங்களிலிருந்து 'ஆல்கஹால்' பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

ஏழைகளைக் கசக்கிப் பணக்காரர்களை உயர்த்துவதுதான் பொருளாதாரக் கொள்கையா?

'அரசமானியம் தரப்பட வேண்டும்' என வலியுறுத்துபவரின் கொள்கை என்ன?

சென்னை, அக். 11—

"ஜன சங்கத் தலைவர் வாஜ்பாய், 'திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பொருளாதாரக் கொள்கை இல்லை' என்று பேசியிருக்கிருர்; 'உமக்குத் தெரியுமா' என்று அவரைத் திருப்பிக் கேட்க முடியும் — ஆனாலும் கேட்கவில்லை; காரணம், அவருடைய பொருளாதாரக் கொள்கை என்ன என்பது நமக்குத் தெரியும் — 'அரசமானியம் தரப்பட வேண்டும்' என்பதுதான் அது!

"ஏழைகளின் வயிற்றில் அடித்துப் பணக்காரர்களை உயர்த்துவதுதானா பொருளாதாரக் கொள்கை?

"வறுமை நீங்கும் அளவில் — ஏழை எளியோரின் வாட்டம் ஒழியும் முறையில் திட்டம் தீட்டப்படுவதுதான் பொருளாதாரக் கொள்கையாகும்; 'ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்போம்' என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன வழியிலே நடக்கும் கழக ஆட்சியில் அது இல்லை என்று எவர் சொல்ல இயலும்?"

—பேராசிரியர் க. அன்பழகன்

(சென்னை 19-வது வட்டத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

கங்குலி விவகாரம் முற்றுகிறது

அமைச்சரின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுப்பு?

குடும்பத்துடன் இரயில்பெட்டியிலேயே தங்கியிருப்பதாகத் தகவல்

புதுடில்லி, அக். 11—

இரயில்வே அமைச்சருக்கும் -- இரயில்வே போர்டுத் தலைவருக்கும் இடையில் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படும் மனக்கசப்பு, இப்போது ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது.

நேற்று இரயில்வே போர்டுத் தலைவர் கங்குலி, குசராத்துக்கு செல்லத் திட்டமிட்டு -- அவருடைய சொகுசு இரயில் பெட்டியில் புறப்பட்டபோது, அப்பெட்டியை இரயிலில் இணைக்க இரயில்வே அதிகாரிகள் மறுத்து விட்டனர்; இரயில்வே அமைச்சரின் உத்தரவுப்படி, அப்பெட்டி நிறுத்தி வைக்கப்பட்டுவிட்டதாக இரயில்வேத் துறை அறிவித்தது.

"இரயில்வே அமைச்சரின் நடவடிக்கை, இரயில்வேயில் மிக உயர்ந்த ஒரு பதவிக்கு இழைக்கப்படும் மிகப் பெரிய அவமானமாகும்" என்று கூறி, கங்குலி, இரயில் பெட்டியிலிருந்து இறங்க மறுத்திருக்கிறார்; 'இதற்கான காரணத்தை எனக்குத் தெரிவிக்கும்வரையில், பெட்டியைவிட்டு நான் இறங்கப்போவதில்லை' என்று கங்குலி உறுதியாக இருக்கிறாராம்.

நேற்று இரயில் நிலையத்திலிருந்து இப்பெட்டி அகற்றப்பட்டு -- வெளிப்பகுதியில் நிறுத்திவைக்கப்பட்டது.

கங்குலி, அவரது மனைவியாருடனும், தனிச் செயலாளருடனும் அப்பெட்டியிலேயே இருந்து வருகிறார்.

ஏற்கனவே கருத்து வேறுபாடு இருந்து வருவதனாலும், அண்மையில் அது முற்றிவிட்டதாலும், இரயில்வே அமைச்சர் தமது சுற்றுப்பயணத்தை ரத்துசெய்துவிட்டு நேற்று காலை அவசரமாக டெல்லி வந்து சேர்ந்ததாகவும், கருத்துவேற்றுமைகளைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்குக் கங்குலி டெல்லியில் இருக்க வேண்டியது அவசியமென்று கருதி அவரது சுற்றுப்பயணத்தை ரத்துசெய்து உத்தரவிட்டதாகவும், அந்த உத்தரவைப் பெற்றுக்கொள்ள கங்குலி மறுத்துவிட்டுத் தமது பயணத்தைத் தொடர முயன்றதாகவும் இரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்: 'கங்குலியின் நடவடிக்கை, கீழ்ப்படியாச் செயலாகும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

பூர்ஷ்வாக்களின் ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓம்மாகும்' என்று பெருமைப் படுகிறவர்கள் நாம்!"

நாவலர் தலைமையில் விழா நிகழ்ச்சிகள்

குடிசை மாற்று வாரியத்தின் துரிதப் பணியாக நடைபெற்ற மூன்றாவது கால்கோள் விழா நிகழ்ச்சியாகும் இது.

இங்கு ரூ. 24 இலட்சம் செலவில் 312 குடியிருப்புக்கள் அமைத்து -- அதன்மூலம் 1,500 ஏழை எளியவர்களைக் குடியமர்த்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

கல்வி அமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் இவ்விழா தொடங்கிற்று.

குடிசை மாற்று வாரியத் தலைவர் இராம. அரங்கண்ணல் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

தலைமைப் பொறியர் கே. ஆர். இராமசாமி, புதிய குடியிருப்புப் பகுதியின் அமைப்பு முறை பற்றிப் பேசினார்.

முரசொலி மாறன் எம்.பி., 'இந்தக் குடியிருப்புத் திட்டம் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு திட்டம்' என்று விளக்கிப் பேசினார்.

தமிழக முதல்வர் புதிய குடியிருப்புக்கான அடிக்கல்லை நிறுவுவதற்காகப் பித்தானை அழுத்தியதும், ஒருபுறம் பட்டுத் திரை விலக -- அண்ணாவும் கலைஞரும் இணைந்து ஒரே சிலை சுழல ஆரம்பித்தது; மறுபுறத்தில் அடிக்கல் பலகை நிறுவப்பட்டது.

மாநகராட்சி உறுப்பினர் நசீர் முகம்மது, 'கழகத்தின் சாதனைப் பணிகளில் ஒன்றான குடிசை மாற்றுத் திட்டத்தைப்பற்றிப் பிற மாநிலத்தவர்களும் பெருமையுடன் புகழ்ந்து பாராட்டுகின்றனர்' என்று கூறி அனைவருக்கும் நன்றி கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-18) அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஆயிரங்கால் மண்டபத்தில் கலைக்கூடம்

திருச்செந்தூர், அக். 11—

தமிழ்நாட்டில் 7 கோயில்களில் உள்ள ஆயிரங்கால் மண்டபங்களில் கலைக்கூடங்களை அமைக்கலாம் என்று தமிழ்நாடு அறநிலைய போர்டு முடிவு செய்திருக்கிறது.

திருவண்ணாமலை, திருவரங்கம், காஞ்சிபுரம், சிதம்பரம், திருநெல்வேலி, திருவானை, திருவாரூர் ஆகிய இடங்களில் உள்ள கோயில்களில் இந்தக் கலைக்கூடங்கள் அமைக்கப்படும்.

ஆலயங்களின் வாயில்களில் உள்ள கடைகளை அகற்றுவது என்றும், கடைக்காரர்களுக்கு மாற்று இடங்களை வழங்கிய பிறகு இந்த ஏற்பாட்டைச் செய்ய வேண்டும் என்றும் போர்டு தீர்மானித்தது.

சென்னை, மதுரை, தஞ்சை, கோவை ஆகிய 4 வட்டார ஆலோசனைக் குழுக்களை அமைப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

உரிமைகட்கு வரையறை இல்லையா?

தரங்கெட்டுத் தாக்குதல் நடத்துவது- செய்திகளைத் திரித்துப் போடுவது தவறான போக்கு அல்லவா?

உரிமைக்கு வாதிடும் இதழாசிரியர்கள் இதனை உணர வேண்டாமா?

சென்னை, அக். 11—

"'பத்திரிகைகளுக்கு கருத்துச் சொல்ல உரிமை உண்டு; அதை அடக்க அரசுக்கு உரிமை கிடையாது' என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

"ஒரு குறிப்பிட்ட பத்திரிகை, 'காங்கிரசுக்கு வாக்களிக்காதீர்கள்' என்றோ, அல்லது, 'தி. மு. கழகத்திற்கு வாக்களிக்காதீர்கள்' என்றோ கூறுவதற்கு உரிமை உண்டு.

"ஆனால், ஒரு குறிப்பிட்ட பத்திரிகை, 'ஆதாரமில்லாமல் அபாண்டம் கூறவோ -- செய்திகளைத் திரித்து வெளியிடவோ உரிமை உண்டு' என்று பத்திரிகை ஆசிரியர்கள் வாதிடுவார்களானால், அவர்களைப்பற்றி நாடு நல்ல தீர்ப்பு அளிக்கவேண்டியிருக்கும்.

"உதாரணமாக, 'தி. மு. கழகம் நடத்திய மாநில சுயாட்சி மாநாடு ஒரு தோல்வி -- கூட்டம் சேராத மாநாடு' என்றெல்லாம் சில பத்திரிகைகள் ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்கின!

"ஆனால் அதே பத்திரிகைகள், ஆளும் காங்கிரசுடன் இணைந்து கொள்வதற்குக் குறிப்பிட்ட சிலர் சேலத்தில் நடத்திய மாநாடு பற்றி எத்தகைய முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரித்தன?

"'இந்த இரு மாநாடுகளையும் ஒப்பிட்டும் பாருங்கள்' என்பதற்காக இதைக் கூறவில்லை; 'சில ஏடுகள் எப்படி நடந்துகொள்கின்றன' என்பதைக் கோடிட்டுக் காட்டுவதற்காகத்தான் இதனைக் குறிப்பிட்டேன்.

"1971 தேர்தல் நடந்தபோது, மயிலாப்பூரில் தேர்தல் அலுவலகத் திறப்பு விழா; தேர்தல் அலுவலகத் திறப்பு விழாவிற்குச் சாதாரணமாக இருநூறு -- முன்னூறுபேர்கள்தான் வருவார்கள்; அதன்படி வந்த அந்தக் கூட்டத்தைப்பற்றி ஒரு பெரிய பத்திரிகை, 'தி. மு. க. கூட்டத்திற்கு 200 பேர்கள்தான் வந்தனர்' என்று எழுதியது; இப்படிச் செய்திகளைத் திரித்துப் போடுவதுதான் பத்திரிகை உரிமையா?

"பத்திரிகைகளுக்குத் தனித் தனிக் கொள்கைகள் இருக்கலாம்; ஒரு பத்திரிகைக்குச் சோஷலிசக் கொள்கை உடன்பாடாக இருக்கலாம் -- இன்னொரு பத்திரிகைக்கு அதில் மாறுபட்ட கருத்து இருக்கலாம்; ஆனால், செய்திகளைப் போடுகின்றபோது, உண்மைகளுக்கு மாறான செய்திகளைப் போடுதல் கூடாது -- செய்திகளைத் திரித்துப் போடுவதும் கூடாது.

"ஆனால், இந்த இரண்டையும் பின்பற்றிச் சில பத்திரிகைகள் தரங்கெட்ட முறையில் தாக்குதல் நடத்தும் போக்கை மேற்கொண்டிருக்கின்றன; தமிழகப் பத்திரிகை உலகம் செல்லுகின்ற இந்தத் தவறான பாதையிலிருந்து அந்தப் பத்திரிகை உலகத்தை விடுவித்தாக வேண்டாமா?

"பெரிய பத்திரிகைகள் -- நடுநிலைப் பத்திரிகைகள் என்பவை, உண்மையான செய்திகளை வெளியிடுதல் -- செய்திகளைத் திரித்து வெளியிடாமை ஆகியவற்றை இனியாவது பின்பற்ற வேண்டுகிறேன்."

— முதலமைச்சர் மு. கருணாநிதி

—'அறைகூவலும் விளைவும்' என்ற ஆங்கில நூல் வெளியீட்டு விழாவில்

பிரச்சினைகளை அரசிடம் விட்டுவிடுக!

'சட்ட நடவடிக்கைகளைவிட அறிவுறுத்தல் மூலம் உரிய பயன் கிட்டும்'

தொழிலாளர்களுக்கு அமைச்சர் என்.வி. நடராசன் அறிவுரை

கோவை, அக். 11—

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கு உரிய சூழ்நிலையை உருவாக்க, ஓராண்டுக் காலம் வேலைநிறுத்தம் இல்லாத தொழில் அமைதிக்கு உறுதி கூறுமாறு தொழிற்சங்கங்களைத் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

கோவையில், பஞ்சாலைத் தொழில் பற்றிய கருத்தரங்கின் இறுதி நாள் கூட்டத்தில் பேசுகையில் அவர், 'மாநில அரசிடம் தொழிற்சங்கங்கள் நம்பிக்கை வைத்து -- தங்கள் பிரச்சினைகளை அரசிடம் விட்டால், தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை அவர்கள் பெற முழு முயற்சி செய்வோம்' என்று அமைச்சர் கூறினார்.

"வேலை நிறுத்தங்கள், தொழிலாளர்கள் -- முதலாளிகளை மட்டுமன்றிச் சமுதாயத்தையும் வரியை இழப்பதால் அரசையும் பாதிக்கிறது" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

தவறு செய்யும் சங்கங்கள்மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்குமாறு ஒருவர் கோரியது பற்றிக் குறிப்பிடுகையில் அமைச்சர் கூறியதாவது:—

"சட்டத்தின் மூலமாக மட்டும் தவறு செய்யும் சங்கங்களை ஒழுங்குபடுத்த முடியும் என அரசு நம்பவில்லை; சட்ட நடவடிக்கையைவிட அறிவுறுத்தலில் அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது; எனினும், தொழில் அமைதியைக் காக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டியயிருந்தால், உறுதியான நடவடிக்கை எடுக்க அரசு தயங்காது."

நிலைமையை சமாளிக்க உறுதியான நடவடிக்கை

பஞ்சாலைத் தொழில் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் கூறியதாவது:—

"பொருளாதாரக் காரணங்கள் மட்டுமன்றி, நிர்வாகச் சீர்கேடும் -- சங்கங்கள் இடையே போட்டியும் தொழிலின் தற்போதைய நிலவரத்துக்குக் காரணமாகும்.

"தங்கள் தவறான வேலைநிறுத்தத்தைப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் திரும்பப்பெறுவிடில் நிலைமையைச் சமாளிக்க அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும்."

பொதுத்துறைத் தொழில்களை ஆராய்வதற்குக் குழு

சிம்லா, அக். 11—

பொதுத் துறை நிறுவனங்கள் இயங்கும் முறைகள் குறித்து ஆராயவும், எப்படி இயங்க வேண்டுமென்று பரிந்துரை செய்வதற்கும் ஓர் உயர் அதிகாரக் குழுவை நியமிப்பதென்று சிம்லாவில் நடைபெற்று முடிந்த அனைத்திந்திய இந்திரா காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

பொள்ளாச்சி இடைத்தேர்தல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பர் 20-ம் நாள் இறுதி நாளாகும்.

வேட்பு மனுக்கள் அக்டோபர் 21-ம் நாள் பரிசீலனை செய்யப்படும்.

வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறுவதற்கான இறுதி நாள் அக்டோபர் 23-ம் நாளாகும்.

போட்டியிருந்தால், நவம்பர் 13-ம் நாள் வாக்குப் பதிவு நடைபெறும்.

வக்களவை தி. மு. கழக உறுப்பினர் உடுமலை நாராயணன் காலமானதைத் தொடர்ந்து, இத்தொகுதியில் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

12--10--71

அந்தியூர்

அண்ணா நினைவு மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு; தேரடித் திடலில் தலைவர்: திரு. எஸ். இராசகோபால்; பேசுவோர்: நெல்லை ஆ. திராவிட மணி, ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ., அ. வெற்றிவேல், ஏ. என். சுப்பிரமணியம், க. ம. இராமசாமி, அ. க. துரைராசு, அ. கா. ஆறுமுகம், மற்றும் பலர்.

மீஞ்சூர்

தி. மு. க. சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: முத்து. பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா, மேயர் சா. கணேசன், ச. சு. இளங்கோ, தேங்காய் சீனிவாசன், செல்வி சந்திரகாந்தா, தி. சு. இலட்சுமணன் எம்.பி., பா. நாகலிங்கம் எம்.எல்.ஏ., ஸ்டண்ட் நடிகர் ஐசரி வேலன், ஏ. வி. என். அங்குசாமி, மு. கேசவன், எம். ஆர். சரவணன், கே. வி. சாமி; பகல் 12 மணிக்கு திரு. சஞ்சையன் தலைமையில் 2,000 ஏழைகளுக்கு உணவு வழங்கப்படும்; மாலை 5 மணிக்கு புனிதம் மு. குணசீலன் தலைமையில் பட்டமந்திரியிலிருந்து அண்ணா உருவப்பட ஊர்வலம்; இரவு 10 மணிக்கு டாக்டர் எம். எஸ். தஜ தலைமையில் மீஞ்சூர் தமிழ் நாடக மன்றத்தாரின் 'உடைந்த கோயில்' எனும் நாடகம் நடைபெறும்.

எடமேலையூர் பள்ளிக் கட்டடத் திறப்பு விழா

எடமேலையூர் அரசினர் உயர்நிலைப் பள்ளியில், மாணவ மாணவியர் — பொதுமக்கள் ஒத்துழைப்புடன் ரூ. 8,000 செலவில் கட்டப்பட்டுள்ள டாக்டர் கலைஞர் கருணாநிதி கலைக்கூடத் திறப்புவிழா, 14—10—71 காலை 10-மணிக்கு திரு. வி. இரங்கராசன் தலைமையில் நடைபெறும்; திரு. வி. சுப்பையன் திறந்துவைப்பார்; கலைஞர் படத்தை, மன்னை கே. எஸ். சௌரிராசன் எம்.சி. திறந்துவைப்பார்.

ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றம்

சென்னை -- எஸ்பிளனேடு ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்தில் 12—10—71 மாலை 6-மணிக்கு, 'மணிமேகலையின் வரலாற்றுச் செய்திகள்' என்ற தலைப்பில், மயிலை சீனி. வேங்கடசாமி உரையாற்றுவார்; டாக்டர் சி. பாலசுப்பிரமணியம் தலைமை வகிப்பார்.